# 074/DM/18

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## SPECIAL LANGUAGE TEST FOR OFFICERS OF THE EDUCATION DEPARTMENT HIGHER STANDARD – FIRST PAPER – TAMIL (TEXT AND TEXTUAL GRAMMAR)

(Without Books)

Maximum Time : 2.30 hours Maximum Marks : 100

### பகுதி I

**எவையேனும் ஆறினுக்கு விடை தருக.** **(6 × 4 = 24)**

1. கம்பராமாயணம் - சிறு குறிப்பு வரைக.

2. அப்பூதி அடிகள் எவ்வெவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசர் எனப் பெயர் வைத்தார்?

3. பழியில்லா மன்னனின் பண்புகளாகக் கணி மேதாவியார் குறிப்பிடுவன யாவை?

4. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.

5. நான்கனுக்கு இலக்கணக் குறிப்பு தருக.

   (அ) தேனும் மீனும

   (ஆ) அருவிலை

   (இ) செலவொழியா

   (ஈ) உறாஅமை.

6. நான்கனுக்கு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

   (அ) முதலைக் கண்ணீர்

   (ஆ) ஆகாயத் தாமரை

   (இ) மடை திறந்த வெள்ளம் போல

   (ஈ) கல் மேல் எழுத்து போல.

7. நான்கனுக்கு எதிர்ச் சொல் தருக.

(அ) இகல்

(ஆ) செறுகர்

(இ) புன்கண்

(ஈ) அல்.

8. நான்கினைப் பிரித்து எழுதுக.

(அ) உன்னோடு வந்துரைக்கும்

(ஆ) சிலம்பொன் றேந்தி

(இ) பருவத்தோ டொட்ட

(ஈ) கிடந்துடல்.

## பகுதி II

**எவையேனும் ஆறு வினாவிற்கு விடை தருக.** **(6 × 6 = 36)**

1. மெய் தான் எனத் தொடங்கும் பாடலை அடிமாறாமல் எழுதுக.

2. செம்மொழிக்குரிய ஐந்து தகுதிபாடுகளை எழுதுக.

3. பெண் கல்வி குறித்து பெரியார் கூறும் கருத்துக்கள் யாவை?

4. செந்தமிழை செழுந்தமிழாய் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை?

5. அயோத்திதாசர் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டுகள் குறித்து எழுதுக.

6. மனிதநேயம் குறித்து காந்தியடிகள் கூறியது யாது?

7. மேடைப் பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்?

## பகுதி III

**எவையேனும் நான்கினுக்கு விடை தருக.** **(4 × 10 = 40)**

1. சிலப்பதிகாரம் காட்டும் சோழ மன்னர்களின் சிறப்புக்கள் யாவை?

2. கமலநாதன் எவ்வாறு மனம் திருந்தினான் -“மெல்ல மெல்ல மற” கதை மூலம் விளக்குக.

3. குறட்டை ஒலி - கதை கருப்பொருளும் மாறாமல் எழுதுக.

4. தொன்மைத் தமிழகத்தின் உழவுத் தொழில் குறித்து எழுது.

5. இன்னா செய்யாமை குறித்து காந்தியடிகள் கூறியது யாது?